கீழ்வாணி செங்குந்த முதலியார்

## வரலாறு

ஈஸ்வரன் ஈஸ்வரியும் உறவாக பேசிக் கொண்டிருக்கும் போது, ஈஸ்வரிக்கும் ஈஸ்வரனுக்கும் ஒரு பிரியம் (ஆசை) விளையாடிக் கொண்டிருக்கும் போது விளையாடும் போது கண்ணைக் கட்டி விளையாடினார்கள். அப்போது ஈஸ்வரன் நெற்றிக் கண்ணைத் திறந்தார். நெற்றிக் கண்ணுக்கு பிரகாசம் அதிகமாக இருந்தது. அந்தப் பிரகாசத்தை பார்த்த ஈஸ்வரியினால் பொறுக்க முடியவில்லை. உடனே அந்த இடத்தை விட்டு ஓடினாள். ஓடும்போது காலில் இருந்த நவரத்தினம் பதித்த சிலம்பு கீழே விழுந்து ரத்தினங்கள் சிதறிவிட்டன. அதைக் கண்ட ஈஸ்வரி திரும்பிப் பார்க்கும் போது - 9 நவரத்தினங்களிலும் ஈஸ்வரியின் 9 உருவம் தெரிந்தது. அதைக்கண்ட ஈஸ்வரி "நான் ஒருவள் தான் ஈஸ்வரி யென்று நினைத்தேன், ஆனால் ஈஸ்வரன் 9 ஈஸ்வரிகளை உடையவராக இருக்கிறாரே!" என்று நினைத்தாள்

நவ ரத்தினங்கள் 9ல் தோன்றிய ஈஸ்வரியும் பெண்களாக மாறிவிட்டன. ஒன்பது பெண்களும் கர்ப்பம் தரித்தார்கள்.

அக்காலம் முருகனுக்கும் அசுரர்களுக்கும் சண்டை வந்தது. அப்போது மேற்சொன்ன ஒன்பது பெண்களுக்கும் பிறந்த 9 வீரர்களையும் முருகனுக்கு உதவியாக சண்டைக்கு அனுப்பினார்கள். இந்த ஒன்பது நவ வீரர்களும் எப்போதும் ரத்தம் தோய்ந்த கத்தியும் ஈட்டியுமாக எதிரியை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கையிலேந்திக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு வீரர்கள் போதாது என்று ஈஸ்வரி ஒரு வேள்வி நடத்தினாள். அப்போது அதில் தன் வேர்வையை எடுத்து வீசும் போது, படையாச்சிகள் தோன்றினார்கள். இவர்கள் முருகனுக்கும், செங்குந்தர்களுக்கும் போருக்கு (சண்டைக்கு) உதவியாக இருந்தார்கள். ஆசாரி தேர் செய்யவும், சக்கிலியர் முரசு கொட்டவும் இருந்தார்கள்.

இவர்கள் சண்டையில் வெற்றி கண்டு -

யாருக்கும் அடங்காமல் இருந்தார்கள் இதைக் கண்டு தேவர்கள் எல்லாம் பயந்தார்கள். தேவர்கள் ஈஸ்வரரிடம் சென்று முறை சொன்னார்கள். ஈஸ்வரர் செங்குந்தர்களுக்கு தொழிலில் பாவமில்லாத தொழிலாகிய நெசவுத் தொழில் செய்ய வரம் கொடுத்தார்.

—— × ——

## காமாக்ஷியம்மன் குல தெய்வம் ஆக காரணம்

ஈஸ்வரனும் ஈஸ்வரியும் நடனம் ஆடும்போது ஈஸ்வரி தோற்று விட்டாள். தோற்றதினால் பந்தய வாக்குப்படி, "நீ பூலோகத்திற்குச் சென்று செங்குந்தர்களுக்கு குலதெய்வமாக இரு!" என்று வரம் கொடுத்தார்

—— × ——